## மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் புகைப் பரீட்சித்தல் நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் புகைப் பரீட்சித்தல் நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரி பிணை முறிகளைக் கொள்வனவு செய்யும் போது வட்டியுடனான விலையின் கீழ் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் போது வாடிக்கையாளருக்கு காலப்பகுதியின் இறுதியின் போது வட்டி வெளிப்படுத்தப்படும் போது அந்தக் காலத்திற்குரிய மொத்த வட்டியும் உரித்தாக இருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட திகதி தொடக்கம் வட்டி வெளியிடப்பட்ட திகதி வரையான வட்டியே ஆண்டிற்குரிய வருமானமாகும். மேலதிக வட்டி முன்னாள் வாடிக்கையாளருக்கு உரித்தாக வருவதுடன் அந்த வட்டி செலுத்தப்பட்ட கிரயத்திலிருந்து கழிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் கணக்குகளின் பிரகாரம் பெறப்பட்ட வட்டி வருமானமாக ரூபா 7,574,180 தொகையும் பெறவேண்டிய வட்டியாக ரூபா 4,776,058 தொகையும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரி பிணை முறிச் சான்றிதழின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டில் கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய மொத்த வட்டி ரூபா 5,442,763 ஆகும். அதன் பிரகாரம் பிழையாகக் கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக திறைசேரி

பிணைமுறிகளின் வட்டி வருமானம் ரூபா 6,907,475 இனாலும் முதலீட்டுக் கிரயம் சமமான பெறுமதியினாலும் கணக்குகளில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) திறைசேரி பிணை முறி முதலீடுகளின் மூலம் மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 4,736,817 ஆக இருந்த போதிலும் அந்த வட்டி ரூபா 39,241 தொகை அதிகமாகவும் திறைசேரி உண்டியல் முதலீட்டின் மூலம் மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 14,807 தொகை குறைவாகவும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 321,156 தொகையான செலவினம் கணக்கு வைக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் மிகை அப்பெறுமானத்தினால் அதிகரித்திருந்தது.

### 1.2.2 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இனங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| **(அ) அரசாங்க நிதிப் பிரமாணம்** | |
| (i) நி.பி. 371(2)(அ) | பதவிநிலை உத்தியோகத்தருக்கு செயல் நிமித்த உப கட்டுநிதியாக ரூபா 20,000 வழங்க முடியுமாக இருந்த போதிலும் அந்த எல்லையினை விஞ்சி 35 சந்தர்ப்பங்களில் அதிக தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 372 ஆம் பிரிவு | திணைக்களம் அல்லது அலுவலகம் அல்லது பொறுப்பில் காணப்படுகின்ற கட்டுநிதி இல்லாது விடினும் உப கட்டுநிதியை பரிசீலனை செய்தல் திணைக்களத்தின் தலைவர் அல்லது அதற்காக அதிகாரமளிக்கப்பட்ட ஏனைய |

| | | |
|---|---|---|
| | | உத்தியோகத்தரினால் ஆகக் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை பரீட்சித்தல் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் நிதியத்தின் முற்பணப் பதிவேடு அவ்வாறான பரீட்சிப்பிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 395(இ) | ஒரு மாதம் முடிவடைந்து அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 396(ஈ) | வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரிக்கும் போது திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட அதாவது உரிய மாதத்தின் போது காசாக மாற்றப்படாத காசோலைகளின் பட்டியலுக்கான விநியோகிக்கப்பட்ட திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. வழங்கப்பட்டிருந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த 07 காசோலைகளின் பெறுமதி ரூபா 100,458 தொகை தொடர்பாக நி.பி. 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) பொது நிதிச் சுற்றுநிருபம்**

| | |
|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 3.2 (ஆ) பந்தி | செலுத்துவதற்குள்ள நிதி மற்றும் ஏனைய பொறுப்புக்களை தீர்த்ததன் பின்னர் சேமிக்கப்படுகின்ற மிகையான பணம் தாமதமின்றி ஒன்றிணைந்த நிதியத்திற்கு மாற்றுதல் மற்றும் மேலதிக நிதியத்தை வெளி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டவைகளில் முதிர்ச்சியடைந்தவைகள் உடனடியாக ஒன்றிணைந்த நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 இன் 17 ஆம் இலக்க அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதிய (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதிய கட்டளைச்சட்டத்தின் 2(4ஆ)(அ), (ஆ) உப பிரிவுகள் | புகைப் பரீட்சித்தல் நிதியத்தில் சேவையாற்றுகின்ற 18 உத்தியோகத்தர்களுக்காக அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 177,236,281 மிகையாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 108,116,340 ஆக இருந்தமையால் மிகையின் அதிகரிப்பு ரூபா 69,119,941 ஆகக் காணப்பட்டது. அந்த அதிகரிப்பிற்காக புகைப் பரீட்சிப்புச் சான்றிதழ் வருமானம் ரூபா 34,841,288 இனாலும் திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானம் ரூபா 27,303,302 இனாலும் அதிகரித்திருந்தமை போன்ற விடயங்கள் தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் ஒவ்வொரு வாகனத்தினதும் தரங்களின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கையில் 2012 ஆம் ஆண்டின் போது புகைப் பரீட்சிப்புச் சான்றிதழ் பெற்ற வாகனங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது. (இந்நாட்டில் பதிவு செய்யப்பட்ட புதிய வாகனங்களுக்காக ஒரு வருட காலம் புகைப் பரீட்சிப்புச் சான்றிதழ் பெறுவது அவசியமற்றியிருந்தமையினால்

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை இந்த பகுப்பாய்விற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது.

| | 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கை | 2012 ஆம் ஆண்டில் புகைப் பரீட்சிப்புச் சான்றிதழ் பெற்ற வாகனங்களின் எண்ணிக்கை | காணப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கையில் புகைப் பரீட்சிப்புச் சான்றிதழ் பெற்ற வாகனங்களின் எண்ணிக்கை சதவீதமாக |
|---|---|---|---|
| மோட்டார் சைக்கிள் | 2,354,163 | 1,371,058 | 58 |
| முச்சக்கர வண்டி | 667,969 | 554,778 | 83 |
| கார் | 468,168 | 302,750 | 65 |
| இரு செயற்பாட்டு வாகனம் | 242,746 | 209,511 | 86 |
| லொறி | 311,510 | 180,619 | 58 |
| மோட்டார் வண்டி / பஸ் வண்டி | 88,528 | 39,895 | 45 |
| மொத்தம் | 4,133,084 | 2,658,611 | |

(அ) முச்சக்கர வண்டி, இரு செயற்பாட்டு வாகனம் தவிர ஏனைய வாகனங்களில் போதியளவான எண்ணிக்கையில் புகைப் பரீட்சிப்புச் சான்றிதழைப் பெற்றிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்டதன் பிரகாரம், சகல வாகனங்களினதும் புகைப் பரீட்சிப்புச் சான்றிதழ் பெறுதலின் வீழ்ச்சித் தன்மையின் பிரகாரம் போலியான புகைப் பரீட்சிப்புச் சான்றிதழ் பெறுபவை அல்லது புகைப் பரீட்சிப்புச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத வாகனங்கள் காணப்படுகின்றதா என்பதை இனங்காண்பதற்காக திணைக்களம் முறையான வேலைத் திட்டமொன்றை அமுறப்படுத்தியிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

வீதியின் இருபக்கமும் மோட்டார் வாகன புகைப் பரீட்சிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக சமூகமளிப்பதற்காக வாடகை அடிப்படையில் தனியார் கம்பனியொன்றிலிருந்து வாகனம் பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக கொடுப்பனவு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட நேரம் மற்றும் உரிய பரீட்சிப்பு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட நேரத்திற்கிடையே வேறுபாடுகள் காணப்பட்டமை.

(ஆ) ஓடப்படுகின்ற கிலோ மீற்றர் எண்ணிக்கை சரியாகக் காண்பிக்கப்படாமை.

(இ) ஒரே கம்பனியினால் கிலோ மீற்றருக்கு எடுக்கப்பட்ட கட்டணம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வேறுபட்டிருந்தமை.

(ஈ) பூரணமற்ற பட்டியல்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை

(உ) வாகன வாடகைக் கட்டணம் செலுத்தும் போது காசோலை மூலம் கொடுப்பனவு செய்வதற்குப் பதிலாக வாகனத்தில் பிரயாணம் செய்த உத்தியோகத்தரினால் காசாகக் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தமை.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையிலுள்ள பேருந்து மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் என்பவைகளுக்காக புகைப் பரீட்சிப்பு நிகழ்ச்சித் திட்டம் உரிய வகையில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுற்றாடலைப் பாதிக்கின்றவாறு வாகனங்களிலிருந்து வெளிவரும் புகையினைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற போதிலும் அந்த நோக்கங்கள் போதியளவில் நிறைவேற்றப்பட்டதா இல்லையா என உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இந் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன்னர் காணப்பட்ட நிலைமை மற்றும் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் காணப்பட்ட நிலைமை தொடர்பாக ஒப்பீடு

செய்யப்பட்டு சூழல்சார்ந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடு முறையான பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியான 2008 நவம்பர் 17 ஆந் திகதி தொடக்கம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் புகைப் பரீட்சிப்புக் கட்டணமாக இரண்டு கம்பனியினால் அறவிடப்படுகின்ற கட்டணத்தில் 10 சதவீத பங்காக ரூபா 364,046,115 தொகையானது திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் இரண்டு கம்பனியினாலும் பரீட்சிக்கப்பட்ட சகல மோட்டார் வாகனங்களில் இருந்தும் அறவிடப்பட்ட புகைப் பரீட்சிப்புக் கட்டணங்களிலிருந்து திணைக்களத்திற்குரிய பங்கு சரியாக அனுப்பப்பட்டதா இல்லையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக திணைக்களத்தில் தீர்மானிக்கப்பட்ட வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புகைப் பரீட்சிப்புச் சான்றிதழ் வழங்கும் வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற இரண்டு தனியார் நிறுவனங்களினால் அந்த வேலைத் திட்டங்கள் அமுல்படுத்துவதின் வெற்றி, தோல்விகளை மதிப்பீடு செய்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) பொதுமக்களின் அறிவு மற்றும் எண்ணங்களின் முன்னேற்றத்திற்கு புகைப் பரீட்சிப்புத் தரவுகள் தொடர்பாக வளர்ச்சியடைந்த ஊடகத்தின் மூலம் 06 மாதங்களுக்கு ஒரு தடவை அறிவித்தலுக்கு உள்ளாக்குதல்.

(ii) பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக வாகனங்களில் ஓட்டுவதற்கு 2 ஸ்டிக்கர்கள் அச்சிடல்.

(iii) நச்சுப் புகையினால் ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்கள் தொடர்பாக தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் அறிவித்தல் மூலமும் வானொலி அறிவித்தல் மூலமும் நாட்டின் சகல மக்களுக்கும் அறிவூட்டுதல்.

(iv) ICTA (Information and Communication Technology Agency) நிறுவனத்தின் மூலம் கிடைக்கின்ற தரவுகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் அந்த தரவுகளை பிரதம செயலகம், மாவட்ட அலுவலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நேரடி (On Line) தகவல் வலைப் பின்னலை ஏற்படுத்துதல்.

(v) புகைப் பரீட்சித்தல் நிலையங்களில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்காக நாளொன்றிற்கு 10 உத்தியோகத்தர்களுக்கு தொழில் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு சான்றிதழ் விநியோகித்தல்.

(vi) பயன்படுத்தப்படுகின்ற சகல வாகன வகைகளினதும் அடிப்படைத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக 24 மெய்மையாய்வுகளை மேற்கொள்ளுதல்.

(vii) உப திணைக்களமாக ஸ்தாபித்தல் மற்றும் அதற்கு ஒத்ததாக மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தைத் திருத்துதல்.

## 4. பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் 10 செலவினங்கள் தொடர்பாக பாதீட்டு மதிப்பீடு மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே ரூபா 68,465,403 கூட்டுத்தொகையான முரண்கள் காணப்பட்டது. அதன் பிரகாரம், பாதீடு தயாரித்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் பாதீடானது ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரண்டு செலவின வகைகளுக்காக ரூபா 275,000 கூட்டுத்தொகையான மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு